செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 011 நாள்: 5/1/18

மீன்வளத்துறை

பத்திரிக்கைச் செய்தி

பல்நோக்கு பண்ணைக் குட்டைகளை அமைத்து மீன்வளர்ப்பு மேற்கொள்ள அரசு மான்யம் !

மாண்புமிகு மீன்வளத்துறை, பணியாளர் நலன் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்பில், தமிழ்நாட்டில் விவசாயிகள் பல்நோக்கு பண்ணை குட்டைகளை புதியதாக அமைத்து மீன்வளர்ப்பு மேற்கொள்வதை ஊக்குவித்து அவர்களின் வருவாயினை பெருக்கிட ஏதுவாக 50 சதவீதம் மானிய உதவி பெற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இத்திட்டத்தில் பயன்பெறும் தகுதியான வேலூர் மாவட்ட வேளாண் விவசாயிகளுக்கு பின்வருமாறு அரசு உதவிகள் வழங்கப்பட உள்ளது.

1. மீன்வளர்ப்பு மேற்கொள்ள, 2500 சதுர மீட்டர் அளவில் புதிய பண்ணைக்குட்டை அமைப்பதற்காக செலவாகும் தொகை ரூ.80,000/– ற்கு அதிகபட்சமாக 50 சதவீதம் மானியத்தொகை ரூ.40,000/– வழங்கப்படும்.
2. ஒரு பண்ணைக்குட்டைக்கு ரூ.10,000/– மதிப்புள்ள 5000 எண்ணக்கை (1.5 – 2 செ. மீ. அளவில் மீன்குஞ்சு ஒன்றுக்கு ரூ.2 வீதம்) கிப்ட் திலேப்பியா (Gift Tilapia) வகை மீன்குஞ்சுகள் இருப்பு வைத்திட அதிகபட்சமாக 50 சதவீதம் மானியத் தொகை ரூ.5,000/– வழங்கப்படும்.
3. ஒரு பண்ணைக்குட்டைக்கு ரூ.38,500 மதிப்பில் 1100 கிலோ (ஒரு கிலோவிற்கு ரூ.35 வீதம்) மீன்தீவனம் வாங்கியமைக்கு அதிகபட்சம் 50 சதவீதம் மானியமாக ரூ.19,250/– வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க விரும்பும் விவசாயிகள் வேலூர், மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை நேரில் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் குறித்த கூடுதல் விபரங்களுக்கு வேலூர் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை (தொலைபேசி எண். 0416 2240329) அணுகலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சியருக்காக
வேலூர்

05/1/18
செ.ம.தொ.அ.துறை
வேலூர்- 9.